සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**Sabaragamuwa Provincial Department of Education**

පළමු වාර පරීක්ෂණය - 2016 | 10 ශ්‍රේණිය
முதலாம் தவணைப் பரீட்சை 2016 | தரம் 10
**First Term Test - 2016** | **Grade 10**

ව්‍යාපාර හා ගිණුම් කරණ අධ්‍යයනය *11* | *පැය දෙකයි*
***வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் 11*** | *02* **மணித்தியாலம்**
***Business Studies and Accounting 11*** | ***Two hours***

பகுதி A

- **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.**

01. நிகழ்காலத்தில் மனிதனது தேவைகளும், எண்ணிறைந்த விருப்பங்களும் **<u>வணிகத்தினால்</u>** பூர்த்தி செய்யப்படுகின்றன. வுணிக எண்ணக்கருவின் அடிப்படையில் **<u>பண்டமாற்று</u>** முறையில் ஆரம்பித்த வணிகமானது இன்ற இலத்திரனியல் வணிகமாக மாற்றமடைந்துள்ளது.

1. மேற்குறிப்பிட்டுள்ள கூற்றில் தடித்த கோடிடப்பட்ட சொற்களால் குறிப்பிடப்படும் கருத்து யாது? (4 புள்ளி)
2. ஒரு மனிதனால் கட்டாயம் பூர்த்தி செய்யப்பட வேண்டியவை தேவைகள் ஆகும். அவை பூர்த்தி செய்யப்படும் வடிவங்கள் விருப்பங்களாகும். தேவை விருப்பங்களுக்கிடையிலான 3 வேறுபாடுகைத் தருக. (3 புள்ளி)
3. வணிகத்தின் உற்பத்தியின், அதன் தன்மைக்கு அடிப்படையில் 2 வகைப்படுத்தலாம். ஆவை எவை? (2 புள்ளி)
4. கல்யாணி தளபாட உற்பத்தி நிலையம் வீட்டு, அலுவலக தளபாட பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு வணிக அமைப்பாகும். எனின் அதன் உற்பத்தி காரணிகளிலான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவற்றுக்கு உதாரணம் ஒன்று வீதம் தருக. (3 புள்ளி)
5. நீர் உமது பாடசாலை சிற்றுண்டிச் சாலையின் உணவு வழங்குனரில் ஒருவர் எனக் கருதுக. எனின் உம்மிடம் இருந்து எதிர்ப்பார்க்கும் 3 விடயங்கள் எவை? (3 புள்ளி)

(மொத்த புள்ளி 15)

02.

1. வணிகச் சூழலை வரையறுக்குக. (1 புள்ளி)
2. வணிகத்தின் வெளிச்சூழலை வரையறுத்து அதன் 2 அம்சங்களைத் தருக. (2 புள்ளி)
3. பூலோக மயமாதலினால் உள்நாட்டு வணிகம் அடைந்துக் கொள்ளும் சாதக, பாதகமான விளைவுகள் இவ்விரண்டு தருக. (4 புள்ளி)
4. வணிகமானது அதன் வணிகச் சூழல் மீது தொடர்ந்து அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் யாவை? (4 புள்ளி)

6. சிறிய அளவிளான காளான் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடும் உமது வணிக நடவடிக்கையில் எதிர்கொள்ளும் பலம், பலவீனம், வாய்ப்பு மற்றும் அச்சுறுத்தலுக்கு உதாரணங்கள் தருக. (4 புள்ளி)

03.

பின்வருவன வணிக அமைப்புக்களாகும்

A – அமரதாச வியாபார நிலையம்

B - இலங்கை தபால் திணைக்களம்

C - இளைஞர் தேசிய மன்றம்

D – வரையறுக்கப்பட்ட ராகொல பல் நோக்க கூட்டுறவு சங்கம்

1. மேற்குறிப்பிட்ட வணிக அமைப்பானது எவ்வகை வணிக அமைப்பாகும்? (4 புள்ளி)
2. மேற்குறிப்பிட்ட வணிக அமைப்புக்களை நோக்க அடிப்படையில் வகைப்படுத்துக. (3 புள்ளி)
3. மேலே குறிப்பிட்ட வணிக அமைப்புகள் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் ஒன்று வீதம் தருக. (4 புள்ளி)
4. மேல் குறிப்பிட்ட வணிக அமைப்புக்களுள் சட்ட ஆளுமை உடைய இரு வணிக அமைப்புக்கள் எவை? (2 புள்ளி)
5. அரச தலையீட்டுடன் கலைக்கப்படும் வணிக அமைப்பு எது? (2 புள்ளி)

04. சமன் ரத்னாயக்க என்பவர் ஒரு தையல் கடையொன்றை ''ரான்சலு டெய்லர்ஸ்'' எனும் பெயரில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளார்.

1. இவ்வணிகத்தினை பதிவு செய்தல் வேண்டுமா? ஏன்? காரணம் தருக. (2 புள்ளி)
2. மேலே குறிப்பிட்ட நிறுவனம் பதிவு செய்யப்படுமாயின், பதிவு செய்யப்பட வேண்டிய உரிய சட்டத்தினையும் பதிவு செய்யும் அலுவலகரையும் குறிப்பிடுக. (2 புள்ளி)
3. அதனியுடமை வணிகத்தினை பதிவு செய்வதற்கான படிமுறைகளைத் தருக. (3 புள்ளி)
4. பங்குடமை, கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கிடையிலான வேறபாடுகள் 4 தருக. (4 புள்ளி)
5. (a) பங்குடமை ஒப்பந்தம் என்றால் என்ன? (1 புள்ளி)
   (b) பங்குடமை ஒப்பந்தம் ஒன்று எவ்வகையில் உருவாக்கப்படுகிறது? (2 புள்ளி)
   (c) பங்குடமை ஒப்பந்தம், பங்குடமை உறுதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது? (1 புள்ளி)